டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்... எண்ணிய முடிதல் வேண்டும்...

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER
★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 127 | 01.11.2025 | SATURDAY | IPPASI : 15 | PRICE : RS.5/-
மலர் : 01 | இதழ் : 127 | 01.11.2025 | சனிக்கிழமை | ஐப்பசி : 15 | விலை : ரூ.5/-

3 ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கான சிறப்பு தீவிர திருத்தம் பணிகள் தொடர்பான பயிற்சி முகாம்

4 விவசாயத்தையும், குடிநீர் ஆதாரத்தையும் அழிக்கும் சாயப்பட்டறையை சேலம் நகரில் அமைப்பதா? - அன்புமணி

2 பிஹார் மக்களை திமுகவினர் துன்புறுத்துவதாக பிரதமர் கூறியது உண்மை ஸ்டாலினுக்கு அண்ணாமலை பதில்

# முழு காஷ்மீரையும் இந்தியாவுடன் இணைக்க படேல் விரும்பினார்; நேரு அனுமதிக்கவில்லை

நர்மதா: நவ.1-

'சர்தார் வல்லபாய் படேல் மற்ற சமஸ்தானங்களை இணைத்தது போல், முழு காஷ்மீரையும் நாட்டுடன் ஒன்றிணைக்க விரும்பினார். ஆனால் அப்போதைய பிரதமர் நேரு அதை நடக்க அனுமதிக்கவில்லை' என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

நரேந்திர மோடி முதல் முறையாக பிரதமரான 2014 முதல் அக்டோபர் 31 ஆம் தேதி சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாள் ராஷ்ட்ரிய ஏக்தா திவாஸ் (தேசிய ஒற்றுமை தினம்) ஆகக் கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, பிரதமர் மோடி குஜராத்தின் நர்மதா மாவட்டத்தில் உள்ள ஏக்தா நகர் அருகே உள்ள 182 மீட்டர் உயரமுள்ள சர்தார் வல்லபாய் படேலின் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதனை தொடர்ந்து படேல் சிலை முன்பாக முதன்முறையாக நடைபெற்ற தேசிய ஒற்றுமை தின அணிவகுப்பை பிரதமர் மோடி பார்வையிட்டார். இதில் காவல்துறை மற்றும் துணை ராணுவப் படைகளின் வீரர்கள் பங்கேற்றனர். இந்த அணிவகுப்பில் துணை ராணுவப் படைகள் மற்றும் ஜம்மு காஷ்மீர், பஞ்சாப்,



அசாம், திரிபுரா, ஒடிசா, சத்தீஸ்கர், கேரளா, ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த காவல் படைகள் உட்பட அனைத்துப் படைகளுக்கும் பெண் அதிகாரிகள் தலைமை தாங்கினர்.

இதனை தொடர்ந்து பேசிய பிரதமர் மோடி, " வரலாற்றை எழுதும் நேரத்தை வீணாக்கக்கூடாது, ஆனால் வரலாற்றை உருவாக்க நாம் கடினமாக உழைக்க வேண்டும் என்று சர்தார் படேல் நம்பினார். சுதந்திரத்திற்குப் பிறகு, 550க்கும் மேற்பட்ட சமஸ்தானங்களை ஒன்றிணைக்கும் சாத்தியமற்ற பணியை சர்தார் படேல் சாத்தியமாக்கினார். ஒரே இந்தியா, சிறந்த இந்தியா என்ற யோசனை படேலுக்கு மிக முக்கியமானது.

சர்தார் வல்லபாய் படேல் மற்ற சமஸ்தானங்களை இணைத்தது போல், முழு காஷ்மீரையும் ஒன்றிணைக்க விரும்பினார். ஆனால் நேரு அவரது விருப்பத்தை நிறைவேற்றுவதைத் தடுத்தார். இதனால் காஷ்மீர் பிரிக்கப்பட்டது, தனி அரசியலமைப்பு மற்றும் தனி கொடி வழங்கப்பட்டது. காங்கிரஸின் இந்த தவறு காரணமாக நம் நாடு பல பத்தாண்டுகளாக பாதிக்கப்பட்டது.

எனது மிகப்பெரிய மகிழ்ச்சி தேசத்திற்கு சேவை செய்வதில் இருந்து வருகிறது என்று சர்தார் படேல் ஒருமுறை குறிப்பிட்டார். தேச சேவைக்கு தன்னை அர்ப்பணித்துக் கொள்வதை விட பெரிய மகிழ்ச்சி வேறு எதுவும் இல்லை என்பதை நம் நாட்டு மக்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்'' என்றார்

இந்த அணிவகுப்பில் 900 கலைஞர்கள் பங்கேற்ற கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் இந்திய கலாச்சாரத்தின் செழுமை மற்றும் பன்முகத்தன்மையைக் குறிக்கும் பாரம்பரிய நடனங்கள் இடம்பெற்றன. இந்த நிகழ்ச்சியில், ஜார்க்கண்டில் நக்சல் எதிர்ப்பு நடவடிக்கைகளிலும், ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் துணிச்சலான நடவடிக்கையை வெளிப்படுத்திய சிஆர்பிஎஃப்ன் 5 சௌரிய சக்ரா விருது பெற்றவர்களும், பிஎஸ்எப்ன் 16 வீரதீரப் பதக்கங்களை வென்றவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.



## மாநில அளவிலான தடகள போட்டிகள் திசையன்விளை மாணவி சாதனை

### தேசிய அளவிலான போட்டிக்கு தேர்வு

திசையன்விளை. நவ.1-

தஞ்சாவூரில் உள்ள அன்னை சத்யா விளையாட்டு அரங்கில் 66வது மாநில குடியரசு தின தடகளப் போட்டிகள் மாநில விளையாட்டுதத்துறை சார்பில் தொடங்கின. இந்த போட்டிகளை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.

இந்த போட்டியில் திசையன்விளை குமாரபுரம் கிராமத்தை சேர்ந்த நாலந்துலா முத்துக்குமாரின் மகள் மு.இ.ராஜேஸ்வரி (வயது 14) சிறந்த திறமையுடன் பங்கேற்று, நீளம் தாண்டுதல் மற்றும் உயரம் தாண்டுதல் போட்டிகளில் தலா இரண்டாம் இடத்தைப் பிடித்து இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றுள்ளார்.மாணவி

மு.இ.ராஜேஸ்வரி தற்போது திசையன்விளை டேனியல் தாமஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியில் 8ஆம் வகுப்பு படித்து வருகிறார். மேலும் இவர் அடுத்த மாதம் நடைபெற உள்ள தேசிய அளவிலான தடகளப் போட்டிகளில் 14 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் நீளம் தாண்டுதல் மற்றும் உயரம் தாண்டுதல் பிரிவுகளில் தமிழகத்தை பிரதிநிதித்துவப்படுத்த தேர்வாகியுள்ளார்.

மாணவி ராஜேஸ்வரியை பள்ளி தாளாளர், தலைமை ஆசிரியர், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் நாலந்துலா ஊர் பொதுமக்கள் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

அழையுங்கள்! வாசகர்களே!!

தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)
(24 x 7)

88705 00000
sakkraviyugam2025@gmail.com

## சின்னாளபட்டியில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் பிறந்தநாள் விழா : ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன் தலைமையில் இனிப்புகள், பிரியாணி வழங்கி கொண்டாட்டம்

### 4வது வார்டு உறுப்பினர் எம்.ஆர்.எஸ்.ஜெயகிருஷ்ணன் தலைமையில் பேரூராட்சி பணியாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் சிக்கன், மட்டன் பிரியாணி வழங்கப்பட்டது

சின்னாளபட்டி, நவ.1-

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், தென்பாண்டிச் சிங்கம், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பி.பெரியசாமி அவர்களின் புதல்வருமான ஐ.பி.செந்தில்குமார் அவர்களின் பிறந்தநாள் விழாவை திண்டுக்கல் கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் வெகு சிறப்பாக கொண்டாடுவது வழக்கம். இவ்வருட பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் சின்னாளபட்டியில் பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து, இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. காமராஜர் சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு ஒன்றியச் செயலாளர் முருகேசன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தியபின்பு அண்ணா சிலை அருகே வைக்கப்பட்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருஉருவ படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன் பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சின்னாளபட்டி பேரூராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு சிக்கன் பிரியாணி, மட்டன் பிரியாணி மற்றும் இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சிக்கு சின்னாளபட்டி பேரூர் கழக திமுக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். பேரூர் கழக பொறுப்பாளர்கள் மற்றும் வார்டு உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். 4வது வார்டு உறுப்பினர் எம்.ஆர்.எஸ். ஜெயகிருஷ்ணன் வரவேற்றார்.





சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட ஒன்றியச் செயலாளர் முருகேசன் தூய்மைப் பணியாளர்களுக்கு மட்டன், மற்றும் சிக்கன் பிரியாணி வைக்கப்பட்ட பைகளை வழங்கினார். அதனைத் தொடர்ந்து பேரூராட்சி சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற அன்னதான நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு பிரியாணி பைகளை வழங்கினார். நிகழ்ச்சியில் பேரூர் கழக திமுக பொறுப்பாளர் பாலகிருஷ்;ணன், பேரூராட்சி மன்றத் தலைவர் பிரதீபா, துணைத் தலைவர் ஆனந்தி, ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், இளைஞரணி அமைப்பாளர் இராஜகணேஷ், பேரூர் கழக பொறுப்பாளர்கள் கிருஷ்ணன், ராஜு, குணசேகரன், நாககண்ணன், தம்பித்துரை, கீர்த்தனா, மெடிக்கல்கோபி, பேரூர் மாணவரணி அமைப்பாளர் வினோத் ஒச்சப்பன், வார்டு உறுப்பினர்கள் தாமரைச்செல்வி, வேல்விழி, ஹேமா, சாந்தி, செல்வி, மற்றும் திமுக நிர்வாகிகள் சென்டு கணேசன், ரவிதண்டபாணி, ஒன்றிய பிரதிநிதிகள் சந்திரன், முத்துவேல் மற்றும் வார்டு செயலாளர்கள் மகளிர் அணியினர், இளைஞர் அணியினர் பலர் கலந்து கொண்டனர்.



■ திண்டுக்கல் மாவட்ட கலைஞர் மாளிகையில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் இ. பெரியசாமி அவர்கள் மற்றும் உணவுத்துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற திண்டுக்கல் கிழக்கு மேற்கு மாவட்ட செயற்கு கூட்டத்தில் தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் கொண்டுவந்துள்ள எஸ் ஐ ஆர் ல் எவ்வாறு பணியாற்றுவது குறித்து ஆலோசனைகளை வழங்கினார்கள். மேலும் இக்கூட்டத்தில் பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார் அவர்கள் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன், முன்னாள் நத்தம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆண்டி அம்பலம் திண்டுக்கல் கிழக்கு,மேற்கு மாவட்ட நிர்வாகிகள் ஆத்தூர், திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், நிலக்கோட்டை, நத்தம்,வேடசந்தூர் தொகுதி பார்வையாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு அழைப்பு தவெகவை பல்ஸ் பார்க்கிறதா திமுக?



சென்னை, நவ.01-

சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி (எஸ்ஐஆர்) குறித்து விவாதிக்க 2ம் தேதி அனைத்து கட்சி கூட்டத்தை திமுக கூட்டியுள்ளது. இதில் கலந்து கொள்ளுமாறு திமுக சார்பில் பூச்சி முருகன் தவெகவுக்கு நேரில் சென்று அழைப்பு விடுத்துள்ளார்.

பாஜகவை எதிர்க்கும் கட்சிகளை ஓரணியில் திரட்டி தக்க வைத்திருக்கும் திமுக, தங்களின் கொள்கை எதிரி என்று பாஜகவை அறிவித்திருக்கும் தவெகவையும் அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு அழைத்திருப்பதன் பின்னணியில் பல அரசியல் கணக்குகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. பாஜக தங்களின் கொள்கை எதிரி என்று அறிவித்திருப்பதை உறுதிப்படுத்த தங்களுக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பாக தவெக இதை மாற்றிக் கொள்ள முயலும்.

ஏற்கெனவே மக்களவைத் தொகுதிகள் மறுசீரமைப்பு தொடர்பாக கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிகூட்டத்தில் அக்கட்சி கலந்து கொண்டது. அதேபோல், எஸ்ஐஆர் தொடர்பான இந்தக் கூட்டத்திலும் தவெக கண்டிப்பாக கலந்து கொள்ளும் என்று திமுக எதிர்பார்க்கிறது. அப்படி கலந்து கொண்டால், தமிழக நலனுக்கு எதிராக எதுவும் நடந்தால் தங்களை கடுமையாக எதிர்க்கும் கட்சியுடனும் நாங்கள் கைகோத்து மாநிலத்தின் நலனைக் காப்போம் என்று காட்டிக்கொள்ள திமுக முயலும்.

அதேசமயம், நாங்கள் பாஜக, அதிமுகவை தவிர அனைத்துக் கட்சிகளையும் ஓரணியில் திரட்டி விட்டோம். உங்களுக்கு எதிராக அனைத்துக் கட்சிகளும் நிற்கின்றன என்று பாஜக கூட்டணிக்கு சவால் விடும் வாய்ப்பாகவும் திமுக இதைப் பயன்படுத்தலாம். ஒருவேளை, அனைத்துக் கட்சிகூட்டத்தை தவெக புறக்கணித்தால், “நாங்கள் முன்பே சொன்னதுபோல் பாஜகவின் மறைமுக ஆதரவில் தான் தவெக செயல்படுகிறது” என்று மக்கள் மன்றத்தில் திமுக பிரச்சாரம் செய்யும்.

இன்னொரு பக்கம், கரூர் விவகாரத்தை முன்வைத்து விஜய்யை தங்கள் பக்கம் இழுக்கும் முயற்சியில் இருக்கும் அதிமுக கூட்டணி, அதில் எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறது என்பதையும் இதன் மூலம் கணிக்க கணக்குப் போடுகிறது திமுக. கூட்டத்தில் தவெக பங்கெடுத்தால் அதிமுக கூட்டணிக்குச் செல்வது குறித்து அந்தக் கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை என்பதை தெளிவுபடுத்திக் கொள்ளலாம் என்பதும் திமுகவின் தந்திரம்.

இப்படி, அனைத்துக் கட்சிக் கூட்டம் தொடர்பாக தவெக எத்தகைய முடிவை எடுத்தாலும் அதைத் தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளும் திட்டத்தில் தான் அவர்களுக்கும் அழைப்பு விடுத்திருக்கிறது திமுக. திமுக வைத்திருக்கும் இந்த டெஸ்ட்டில் தவெக என்ன ட்விஸ்ட் வைக்கப் போகிறது என்பதை 2ம் தேதி பார்க்கலாம்.

# பிஹார் மக்களை திமுகவினர் துன்புறுத்துவதாக பிரதமர் கூறியது உண்மை - ஸ்டாலினுக்கு அண்ணாமலை பதில்



சென்னை, நவ.01-

“உழைக்கும் பிஹார் மக்களைத் திமுகவினர் துன்புறுத்துகின்றனர் என்று, நமது பிரதமர் கூறியது முழுக்க முழுக்க உண்மை. பிஹார் மக்களை துன்புறுத்தியதாக பிரதமர் திமுகவினரைக் குறிப்பிட்டதை, தமிழக மக்களைக் குறிப்பிட்டதாக முதல்வர் ஸ்டாலின் மடைமாற்ற முயற்சிக்கிறார்” என தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “திமுகவின் ஊழலும், போலி வேடமும் மக்கள் மத்தியில் அம்பலப்படும் போதெல்லாம், அதனை மடைமாற்ற, மக்கள் மத்தியில் பிரிவினையைத் தூண்டுவது திமுகவின் வழக்கம். நகராட்சி நிர்வாகத் துறையில், ரூ.888 கோடி ஊழல் நடந்திருப்பது வெளியானவுடன், அதனை மறைக்கும் முயற்சியைத் தொடங்கியிருக்கிறார் முதல்வர் ஸ்டாலின்.

உழைக்கும் பிஹார் மக்களைத் திமுகவினர் துன்புறுத்துகின்றனர் என்று, நமது பிரதமர் கூறியது முழுக்க முழுக்க உண்மை. தமிழக அமைச்சர்கள் பொன்முடி, டி. ஆர். பி. ராஜா, எம்பி தயாநிதி மாறன், ஆ.ராசா தொடங்கி, கடைக்கோடி திமுக நிர்வாகிகள் வரை, பிஹார் மக்களை ஏளனமாகப் பேசியதும், அவர்கள் மீது தாக்குதலுக்குத் தூண்டுவதைப் போல பேசியதும், தமிழக மக்கள் அறிவார்கள்.

முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள இந்த காணொளியிலேயே, நமது பிரதமர் தமிழகத்தில், பிஹார் மக்களை திமுகவினர் துன்புறுத்துகிறார்கள் என்று பேசியிருப்பது தான் இருக்கிறது.

எப்படி, திமுகவினர் தமிழகத்தின் அவமானச் சின்னமாக இருக்கிறார்களோ, அதே போல, பிரதமர் திமுகவினரைக் குறிப்பிட்டதை, தமிழக மக்களைக் குறிப்பிட்டதாக மடைமாற்ற முயற்சிப்பது, ஸ்டாலின் வகிக்கும் முதல்வர் பதவிக்கே அவமானம். தாத்தா காலத்தில் தொடங்கிய இந்த அற்ப அரசியலை, பேரன் காலத்திலும் தொடர்வதை, முதல்வர் நிறுத்திக் கொள்ள வேண்டும்“ எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக இன்று முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘இந்த நாட்டிலுள்ள அனைவருக்குமான பிரதமர் பொறுப்பில் இருக்கிறோம் என்பதையே நரேந்திர மோடி அடிக்கடி மறந்து, இதுபோன்ற பேச்சுகளால் தன்னுடைய பொறுப்புக்குரிய மாண்பை இழந்துவிடக் கூடாது என்று ஒரு தமிழனாக வேதனையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஒடிசா பிஹார் என்று எங்கு சென்றாலும், பாஜகவினர் தமிழர்களின் மீதான வன்மத்தைத் தேர்தல் அரசியலுக்காக வெளிப்படுத்துவதற்குத் தமிழ்நாட்டு மக்களின் முதல்வர் என்ற முறையில் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பன்முகத்தன்மை கொண்ட, வேற்றுமையில் ஒற்றுமையைக் காணும் பெருமைமிக்க இந்தியாவில், இந்துக் களுக்கும் முஸ்லீம்களுக்கும் பகையை வளர்ப்பது, தமிழர்களுக்கும் பிஹார் மக்களுக்கும் பகை உண்டாக்கும்படி நடந்துகொள்வது போன்ற அற்ப அரசியல் செயல்பாடுகளை நிறுத்திவிட்டு, நாட்டின் நலன் மீது பிரதமரும் பா.ஜ.க.,வினரும் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்துகிறேன்’ எனத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, நேற்று பிஹாரில் நடந்த பிரச்சார கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, “ திமுக ஆளும் தமிழ்நாட்டில் திமுகவினர் பிஹாரைச் சேர்ந்த உழைக்கும் மக்களை துன்புறுத்துகின்றனர்” என்று குற்றம்சாட்டியிருந்தார்.



# பாலமேடு இந்து நாடார்கள் உறவின்முறை சங்க பத்திரகாளியம்மன் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளியில் 37வது ஆண்டு விளையாட்டு விழா

பாலமேடு, நவ.01-

மதுரை மாவட்டம் பாலமேடு இந்து நாடார்கள் உறவின்முறை சங்கத்திற்கு பாத்தியப்பட்ட பத்திரகாளியம்மன் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளியின் 37வது ஆண்டு விளையாட்டு விழா டாக்டர். பா.சிவந்தி ஆதித்தனார் கல்வி மாளிகை முன்பாக நடந்தது. இந்த நிகழ்ச்சிக்கு பள்ளியின் தலைவர் நாகராஜன் தலைமை தாங்கினார். துணை தலைவர் சுரேஷ், செயலாளர் சேகர், பொருளாளர் முருகவேல், மற்றும் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். இந்த விழாவில் இந்து நாடார் உறவின் முறை சங்க தலைவர் ஜோதிதங்கமணி, துணை தலைவர் தவமணி குமார், செயலாளர் மயில்வாகனன், பொருளாளர் தனசேகரவேல் பாண்டியன், மற்றும் இந்து நாடார் உறவின்முறை வாலிபர் சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

பள்ளி முதல்வர் ரதிபிரியா, வரவேற்றார். என்.டி.சி நிறுவன முதன்மை நிர்வாக அலுவலர் ஸ்டீபன்ராஜ், தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி மதுரை மண்டல துணைத் தலைவர் ஜெபானந்த் ஜூலியஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பேசினார். தொடர்ந்து பல்வேறு விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ மாணவிகளுக்கு பரிசு பொருட்கள் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டன. பின்னர் மாணவ, மாணவிகள் கலந்து கொண்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடந்தது.

# சேலத்தை பலம் சோதிக்கும் களமாக மாற்றிய ராமதாஸ் அன்புமணி



சேலம், நவ.01-

பாமகவுக்கு செல்வாக்கு மிக்க மாவட்டங்களில் சேலம் பிரதானமாக உள்ளது. இங்கு, மேட்டூர் பாமக எம்எல்ஏவாக சதாசிவமும், சேலம் மேற்கு பாமக எம்எல்ஏவாக அருளும் இருந்து வருகின்றனர். இதில், ராமதாஸுக்கு ஆதரவாக அருளும், அன்புமணிக்கு ஆதரவாக சதாசிவமும் கொடிதூக்கி நிற்கிறார்கள். இந்த நிலையில், சேலத்தில் தங்களது இருப்பைத் தக்கவைக்க அண்மையில் அங்கே, ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட பாமக பொதுக்குழு கூட்டத்தை நடத்தினார் ராமதாஸ்.

அந்தக் கூட்டத்தில் அவர் பேசுகையில், “பாமக இளைஞரணிக்கு தளபதியாக தமிழ்குமரன் நியமிக்கப்பட்டுள்ளார். அனைத்து இளைஞர்களும் அவருக்கு துணை நிற்க வேண்டும். பாமக இளைஞரணி அவரை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பாமகவுக்கு சேவை செய்யவே எனது பெரிய மகளை செயல்தலைவராக தந்துள்ளேன்” என்று சொன்னதுடன், “பாமக சார்பில் 10.5 சதவீத உள் இடஒதுக்கீடு போராட்டம் டிசம்பர் மாதம் நடைபெறும்” என போராட்ட அறிவிப்பையும் வெளியிட்டார்.

ராமதாஸ் இப்படிக் கூட்டம் போட்டு பேசிய அடி மறைவதற்குள் அன்புமணியும் கடந்த 28ம் தேதி தொடங்கி தனது நான்கு நாள் சுற்றுப்பயணத்தை சேலம் மாவட்டத்தில் தொகுதி வாரியாக மேற்கொண்டு வருகிறார். கடந்த 29ம் தேதி எடப்பாடி தொகுதிக்கு உட்பட்ட ஆவணியூர் திருமலை நகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய அன்புமணி, “10.5 சதவீத உள் இடஒதுக்கீடு கேட்டு டிசம்பர் 17ம் தேதி எனது தலைமையில் சிறை நிரப்பும் போராட்டம் நடைபெறும்” என தந்தைக்குப் போட்டியாக அறிவித்தார். தந்தையும் தனயனும் சேலம் மாவட்டத்தை தங்களின் பலத்தை சோதிக்கும் களமாக மாற்றி வருவதால் இரண்டு தரப்பிலும் ஆதரவு திரட்டும் பணிகள் மும்முரமாகி வருகின்றன.





# என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனை கூட்டம்

## என்னால் திமுகவுக்கு எந்த கெட்ட பெயரும் வராது திருச்சி கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு

திருச்சி, நவ.01-

மாவட்டச் செயலாளர்கள் வைரமணி, காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திமுக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு சிறப்புரையாற்றினார்.

அப்போது அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:

திமுக தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 28ந் தேதி நடைபெற்ற கூட்டத்தில் பல்வேறு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கான பணி, ஒன்றிய செயலாளர்களுக்கான பணி என்ன ?என்பதை அச்சிட்டு வழங்க உள்ளனர்.

கிராமங்களில் 2002 வாக்காளர் பட்டியலையும், நகரங்களில் 2005 வாக்காளர் பட்டியலையும் நாம் கையில் வைத்துக் கொண்டு, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல் போன்ற பணிகளை பார்க்க வேண்டும். வடமாநிலத்தைச் சேர்ந்த நிறைய பேர் இங்கு வேலைக்கு வருகிறார்கள். வட மாநிலத்தவர்கள் மூன்று மாதங்களில் ஒரே இடத்தில் தங்கியிருந்தால் வாக்காளர் பட்டியலில் பெயர்கள் சேர்க்க முடியும். அதற்கான முயற்சியில் அவர்கள் ஈடுபடுவார்கள்.

நமக்கு யார் யாரெல்லாம் வாக்களிக்கிறார்களோ? அவர்களை எல்லாம் தவிர்ப்பதற்கு தேர்தல் அலுவலர்கள் திட்டமிட்டால் தடுக்க வேண்டியது நமது கடமை. 100, 200 வாக்காளர்களை மொத்தமாக சேர்த்தால் அதை நாம் தவிர்க்க வேண்டும்.

பெண்களுடைய வாக்குகள் ஒன்று கூட தவறாமல் இடம்பெற செய்ய வேண்டும்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற தொகுதிகள் குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# சின்னாளபட்டி பேரூராட்சி பகுதிகளில் நலத்திட்ட பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்- பேரூராட்சி மன்ற கூட்டத்தில் வார்டு உறுப்பினர்கள் கோரிக்கை



சின்னாளபட்டி, நவ.01-

கூட்டத்திற்கு பேரூராட்சி மன்றத்தலைவர் பிரதீபா தலைமை தாங்கினார். துணைத்தலைவர் ஆனந்தி முன்னிலை வகித்தார். கூட்ட தீர்மானத்தை அலுவலக கணக்காளர் கலைச்செல்வி வாசித்தார். கூட்டத்தில் முதல் தீர்மானமாக பிறப்பு இறப்பு தீர்மானம் முடிந்தவுடன், வரிவசூல் நிலுவை மன்றத்தின் பார்வைக்கு தெரிவிக்கப்பட்டது. அதன்பின்னர் 14 தீர்மானங்கள் வாசிக்கப்பட்டது. கூட்டம் ஆரம்பித்தவுடன் 4வது வார்டு உறுப்பினர் எம்.ஆர். எஸ்.ஜெயகிருஷ்ணன் எழுந்து, பேரூராட்சி அலுவலகம் முன்பு துண்டு பிரசுரங்கள் ஒட்டியுள்ளீர்கள். அதில் அலுவலகத்திற்குள் கைலி வேஷ்டி மற்றும் டவுசர் அணிந்து வர அனுமதியில்லை என வாசகம் உள்ளது. இது என்ன அலுவலகமா கோவிலா என கேள்வி எழுப்பினார். அதற்கு பதில் அளித்த துப்புரவு அலுவலர் மணிகண்டன் ஒருசில பேர் டவுசர் அணிந்துகொண்டு அலுவலகத்திற்கு வருகின்றனர் என்றார். அப்போது பேசிய வார்டு உறுப்பினர்கள் பேரூராட்சி தூய்மை பணியாளர்கள் முதல்கொண்டு கூலி நெசவு தொழிலாளர்கள் வேலை செய்யும் போது கைலி வேஷ்டி அணிந்துகொண்டுதான் வேலை செய்கிறார்கள் அவர்கள் பேரூராட்சி அலுவலகத்திற்கு வரும்போது தடையிருக்க கூடாது என்றார். அதற்கு பதில் அளித்த செயல் அலுவலர் இளவரசி கைலி வேஷ்டி கட்டிக்கொண்டு வரலாம். ஆனால் டவுசர் அணிந்து கொண்டு அலுவலகத்திற்கு வர அனுமதி இல்லை வாசகத்தை மாற்றி விடுகிறோம் என்றார்.

அதன்பின்னர் 15வது வார்டு உறுப்பினர் ராஜ் பேசும்போது எனது வார்டில் 3மாதங்களுக்கு முன்பு பேவர் பிளாக் சாலை அமைப்பதற்காக தோண்டி போட்ட பள்ளம் இன்னும் உள்ளது. ஒப்பந்தகாரர் பணி செய்வாரா, பணிசெய்யமாட்டாரா என கேள்வி எழுப்பினார் அதற்கு பதில் அளித்து பேசிய பேரூராட்சிமன்ற தலைவர் பிரதீபா அடுத்த வாரம் உங்கள் வார்டில் பணிகள் தொடங்கப்படும் என்றார். அதன்பின்னர் அனைத்து வார்டு உறுப்பினர்களும் பேரூராட்சிமன்ற தலைவரிடம் மன்ற கூட்டம் நடைபெறுகிறது இஞ்சினியர் ஏன் வரவில்லை என கேள்வி எழுப்பினார்கள். அடுத்த கூட்டத்தில் அனைத்து பேரூராட்சியில் உள்ள அனைத்து அதிகாரிகளும் கலந்துகொள்ளும்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கைவிடுத்தனர். அதன்பின்னர் கூட்டத்தில் வேல்விழி, செல்வகுமாரி, எம்.ஆர். எஸ்.ஜெயகிருஷ்ணன், தாமரைச்செல்வி, காமாட்சி, சாந்திகணேசன், ராஜாத்தி, செல்வி, சுப்பிரமணி, ராஜ், ஹேமா, லெட்சுமி குமரகண்ணன், உட்பட வார்டு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். நிறைவாக அலுவலக உதவியாளர் கலைச்செல்வி நன்றி கூறினார்.

# திருப்பூர் அவிநாசி நெடுஞ்சாலை துறைக்கு உட்பட்ட சாலைகளில் பனை விதைகள் நடும் திட்டப்பணி



திருப்பூர், நவ.01-

திருப்பூர் நெடுஞ்சாலைத்துறை கோட்டம், அவிநாசி நெடுஞ்சாலை துறைக்கு உட்பட்ட சாலைகளில் பனை விதை நடும் திட்டத்தின் கீழ் 2100 பனை விதைகள் ஒதுக்கப்பட்டதில், 2100 பனை விதைகள் சேகரிக்கப்பட்டு, கருவலூர் கோவில்பாளையம் சாலையில் 1800 பண விதை மற்றும் கருவலூர் தண்டுக்காரன்பாளையம் சாலையில் 300 பனை விதைகளும் நடும் பணி நடைபெற்றது. பனையின் முக்கியத்துவம் மற்றும் மரங்கள் குறைவதை தடுக்கவும், பனை மரங்கள் வளர்ப்பது மண்ணரிப்பை கட்டுப்படுத்தவும், மேலும் இது வளர்ந்து பல சுற்றுச்சூழல் நன்மைகள் தரும் என்று அவிநாசி நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர், உதவி பொறியாளர் ஆகியோர் தெரிவித்தனர்.

# நான் எந்த தவறும் செய்யவில்லை விசாரணையில் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிப்போம் அமலாக்கத் துறை புகாருக்கு அமைச்சர் கே.என்.நேரு விளக்கம்

திருச்சி, நவ.01-

நான் எந்த தவறும் செய்யவில்லை.விசாரணையில் உச்சமற்றவர்கள் என்பதை நிரூபிப்போம் என்று அமைச்சர் கே.என்.நேரு கூறினார்.

திருச்சி மத்திய வடக்கு மாவட்ட திமுக சார்பில் வாக்குச்சாவடி ஆலோசனை கூட்டம் கலைஞர் அறிவாலயத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டம் முடிந்தபின் அமைச்சர் கே.என்.நேரு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அமலாக்கத்துறை சோதனை எங்களுக்கு சொந்தமான இடத்தில் நடத்திய சோதனையின் பொழுது, சில ஆவணங்கள் கிடைத்ததாகவும், அது குறித்து ஆய்வு செய்யுமாறு அமலாக்கத்துறை தமிழக போலீசாருக்கு தெரிவித்தனர். அதன் அடிப்படையில் தமிழக போலீசார் அந்த ஆவணங்களை ஆய்வு செய்வார்கள். முறைகேடு நடந்ததா ? என்பதை போலீசார் விசாரிப்பார்கள். ஆனால் நான் எந்தவித தவறும் செய்யவில்லை. திமுகவை மிரட்டி பார்ப்பதற்காக கூட இதுபோன்று அவர்கள் செய்யலாம். திமுகவில் மூத்த தலைவர்களை ஓரங்கட்டும் வேலையை யாரும் செய்யவில்லை. தேர்தல் நேரத்தில் எங்களை விமர்சிக்க எதிர்க்கட்சிக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. விசாரணையில் நாங்கள் குற்றம் அற்றவர்கள் என்பதை நிரூபிப்போம். எஸ்.ஐ.ஆர் நேர்மையாக நடந்தால் சரியாக இருக்கும். ஆனால் வேண்டுமென்றே பல வாக்காளர்களை கொத்துக்கொத்தாக வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதையும், நீக்குவதையும் தான் எதிர்க்கிறோம் என அவர் கூறினார்.



# திசையன்விளை யில் காங்கிரஸ் சார்பில் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி நினைவு நாள்: மாலை அணிவித்து மரியாதை

திசையன்விளை, நவ.01-

திசையன்விளை நகர காங்கிரஸ் சார்பில் முன்னாள் பிரதமர் அன்னை இந்திரா காந்தி யின் 42 வது நினைவு நாள் அஞ்சலி கூட்டம் நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு நகர காங்கிரஸ் தலைவர் ஏவிஜெ.அல்பர்ட் தலைமை வகித்தார்.இந்திராகாந்தி படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.நிகழ்ச்சியில் மாவட்ட ஓபிசி பிரிவு தலைவர் லாசர், மாவட்ட செயலாளர் மருதூர் மணிமாறன், மாவட்ட கலைப் பிரிவு தலைவர் ஞான ராஜ் ,நகர காங்கிரஸ் செயலாளர் சங்கர், இணைச் செயலாளர் ஆசிரியர் செல்லப்பா, மாநில அமைப்பு சாரா தொழிலாளர்கள் பிரிவு பொதுக்குழு உறுப்பினர் ஜெய பாண்டி, மாவட்ட வர்த்தக அணி செயலாளர் ஐசக், ராதாபுரம் கிழக்கு வட்டார தலைவர் அந் தோணி ராஜ், காங்கிரஸ் நிர்வாகிகள் விஜய ராஜன், ராஜபாண்டி, ஆரஞ்சு முருகேசன், மும்பை மோசஸ்,தேவதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ திருப்பூர் மாவட்டம் உடுமலை ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆர் வேலூர், வடபூதனம் ஆகிய ஊராட்சிகளுக்கு வாளவாடி அரிமா சங்க திருமண மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகம் நடைபெற்றது. இந்நிகழ்வில் திருப்பூர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் இல. பத்மநாபன் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார், உடன் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் செழியன், செயற்குழு உறுப்பினர் எம் ஆர் பாபு, ஆர் வேலூர் கிளை கழக பொறுப்பாளர் வெங்கடேஷ், பி எல் ஏ 2 அசோக்குமார், லிங்குசாமி, அமைப்பாளர்கள் கிருஷ்ணசாமி, தண்டபாணி மற்றும் ஊராட்சி செயலாளர் ஆர் வேலூர் விமலா, வடபூதணம் கந்தவடிவேல் உடுமலை ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் செல்டன் மற்றும் அரசு துறை சார்ந்த அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



## சின்னாளபட்டியில் பசும்பொன் தேவர் திருமகனாரின் 118வது பிறந்தநாள் விழா:

# திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் தலைமையில் ஊர்வலமாக வந்து தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

சின்னாளபட்டி, நவ.01-

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி வடக்குதெரு பகுதியில் அமைந்துள்ளது பசும்பொன் தேவர் திருமகனாரின் திருவுருவச்சிலை ஒவ்வொரு வருடமும் தேவர் ஜெயந்தியை முன்னிட்டு, பசும்பொன் தேவரின் 118வது ஜெயந்தியை முன்னிட்டு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும் பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் தலைமையில், ஆத்தூர் ஒன்றிய திமுகவினர் ஊர்வலமாக வந்து தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். அப்போது கட்சி நிர்வாகிகள் மத்தியில் பேசிய ஐ.பி.செந்தில்குமார் அவர்கள் அனைத்து சமுதாய மக்களும் போற்றகூடிய தலைவராக பசும்பொன் தேவர் திருமகனார் இருந்ததால்தான், இன்றுவரை அவருடைய பிறந்தநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது என்றதோடு திராவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத்தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேவர் நினைவிடத்தில் மணிமண்டபம் கட்டப்படும் என அறிவித்திருப்பது மகிழ்ச்சிக்கு உரியது என்றார். நிகழ்ச்சியில் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன், பேரூர்கழக திமுக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், முன்னால் செயலாளர்கள் அறிவழகன், மோகன்ராஜ், பேரூராட்சிமன்ற தலைவர் பிரதீபா, துணைத்தலைவர் ஆனந்தி, ஒன்றிய மாணவரணிஅமைப்பாளர் அரவிந்தன், நகர மாணவரணி அமைப்பாளர் வினோத் ஒச்சப்பன், பேரூர் கழக பொறுப்பாளர்கள் கிருஷ்ணன், ராஜுு, குணசேகரன், நாககண்ணன், தம்பித்துரை, கீர்த்தனா, மெடிக்கல்கோபி, ஆட்டோ வேல்முருகன், மற்றும் பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர். இதுபோல ஆத்தூர் ஒன்றியம் சி.பி.எம்.கட்சி சார்பாக பசும்பொன் தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ;ச்சி நடைபெற்றது. சிபிஎம் மாநிலக்குழு உறுப்பினரும் திண்டுக்க எம்.பி யுமான ஆர்.சச்சிதானந்தம் தலைமையில் முன்னாள் ஒன்றிய செயலாளரும், மூத்ததோழர் வி.கே. முருகன், மாவட்டக்குழு உறுப்பினர் சந்திர போஸ் ஒன்றியசெயலாளர் சூசைமேரி சிஐடியூ மாவட்ட செயலாளர் பிரபாகரன்இ துணைத் தலைவர் ஆர்.பால்ராஜ் மற்றும் சி.பி.எம் கட்சி நிர்வாகிகள் பசும்பொன் தேவர் சிலைக்கு மாலை அணிவித்த மரியாதை செலுத்தினார்கள். பசும்பொன் தேவர் சிலைக்கு மரியாவீதை செலுத்த வந்த நிர்வாகிகளை சின்னாளபட்டி தேவர் சிலை நிறுவனர் பி.எஸ்.சேகர் தலைமையில் நகர தேவர் பேரவை தலைவர் எம்.கலைச் செல்வம், பி.எஸ்.குமரேசன் மற்றும் தேவர் பேரவை நிர்வாகிகள் மாலை மற்றும் சால்வை அணிவித்து வரவேற்றனர்.

# சின்னாளபட்டியில் பசும்பொன் தேவர் திருமகனாரின் 118வது பிறந்தநாள் விழா திண்டுக்கல் எம்.பி.சச்சிதானந்தம் தலைமையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் பசும்பொன் தேவர்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்

## அதிமுக, நாம் தமிழர், பாட்டாளி மக்கள் கட்சி, காங்கிரஸ், தவெக, தமிழக வாழ்வுரிமை கட்சி யினர் ஊர்வலமாக வந்து தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்



சின்னாளபட்டி, நவ.01-

பசும்பொன் தேவர் திருமகனாரின் 117வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சின்னாளபட்டியில் உள்ள பசும்பொன் தேவர் சிலைக்கு திண்டுக்கல் எம்.பி.சச்சிதானந்தம் தலைமையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரும் அதிமுக, நாம் தமிழர், பாட்டாளி மக்கள் கட்சி, காங்கிரஸ், தவெக, தமிழக வாழ்வுரிமை கட்சி யினர் ஊர்வலமாக வந்து தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி வடக்குதெரு பகுதியில் அமைந்துள்ளது பசும்பொன் தேவர் திருமகனாரின் திருவுருவச்சிலை ஒவ்வொரு வருடமும் தேவர் ஜெயந்தியை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதியில் இருந்தும் அரசியல் கட்சிபிரமுகர்கள் ஊர்வலமாக வந்து மாலை அணிவித்து மரியாதை செலுத்துவது வழக்கம் இவ்வருடம் பசும்பொன் தேவரின் 118வது ஜெயந்தியை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் சி.பி.எம்.கட்சி சார்பாக பசும்பொன் தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ;ச்சி நடைபெற்றது. சிபிஎம் மாநிலக்குழு உறுப்பினரும் திண்டுக்க எம்.பி யுமான ஆர்.சச்சிதானந்தம் தலைமையில் முன்னாள் ஒன்றிய செயலாளரும், மூத்ததோழர் வி.கே. முருகன், மாவட்டக்குழு உறுப்பினர் சந்திர போஸ் ஒன்றிய செயலாளர் சூசைமேரி சிஐடியூ மாவட்ட செயலாளர் பிரபாகரன்இ துணைத் தலைவர் ஆர்.பால்ராஜ் மற்றும் சி.பி.எம் கட்சி நிர்வாகிகள் பசும்பொன் தேவர் சிலைக்கு மாலை அணிவித்த மரியாதை செலுத்தினார்கள். இதுபோல அதிமுக, நாம் தமிழர், பாட்டாளி மக்கள் கட்சி, காங்கிரஸ், தவெக, தமிழக வாழ்வுரிமை கட்சி யினர் ஊர்வலமாக வந்து தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி னார்கள். தேவர் சிலைக்கு மரியாவீதை செலுத்த வந்த நிர்வாகிகளை சின்னாளபட்டி தேவர் சிலை நிறுவனர் பி.எஸ்.சேகர் தலைமையில் நகர தேவர் பேரவை தலைவர் எம்.கலைச் செல்வம், பி.எஸ்.குமரேசன் மற்றும் தேவர் பேரவை நிர்வாகிகள் மாலை மற்றும் சால்வை அணிவித்து வரவேற்றனர். காலை 8 மணி முதல் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள தேவர் சமுதாய நிர்வாகிகள் ஊர்வலமாக வந்து, சின்னாளபட்டியில் உள்ள பசும்பொன் தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய வண்ணம் இருந்தனர்.





# போடி காவல்துறையினர் சார்பாக போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு ஊர்வலம்

போடி, நவ.01-

தேனி மாவட்டம் போடி உட்கோட்ட காவல்துறை யினர் சார்பாக போதை பொருள் ஒழிப்பு மற்றும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு, பெண்கள் பாதுகாப்பு, வலைதள குற்றத்தடுப்பு குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் மாவட்ட கண்காணிப்பாளர் புக்யா சினேகா பிரியா தலைமையில் நடைபெற்றது. நகராட்சி அலுவலகம் அருகே தொடங்கிய இந்த ஊர்வலத்தை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் பச்சை கொடி அசைத்து ஊர்வலத்தை தொடங்கி வைத்தார். இந்த ஊர்வலமானது போடி நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று பொதுமக்களுக்கு, பள்ளி மாணவ மாணவிகள் விழிப்புணர்வு பதாதைகள் ஏந்தியும், கோஷங்கள் எழுப்பியும், விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இந்த விழிப்புணர் ஊர்வலத்தில், டிஎஸ்பி தேவராஜ், போடி நகர் காவல் நிலைய ஆய்வாளர் கோபிநாத், போடி அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் மீனாட்சி, சின்னமனூர் காவல் ஆய்வாளர் பாலாண்டி, தேவாரம் காவல் ஆய்வாளர் அய்யம்மாள் ஜோதி, மற்றும் காவல் சார்பு ஆய்வாளர்கள் காவல் துறையினர் பலர் கலந்து கொண்டனர்.

# அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான மீளாய்வுக் கூட்டம்



தேனி, நவ.01-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான மீளாய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங்,தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களின் காலாண்டு தேர்ச்சி சதவிகிதத்தை விட அரையாண்டுத்தேர்வு தேர்ச்சி விகிதம் அதிகமாக இருக்க வேண்டும். மாணவர்களுக்கு ஆரம்பம் முதலே தக்க வழிகாட்டுதல்கள் வழங்கி தொடர்ச்சியாக மாணவர்கள் பள்ளிக்கு வருவதையும், பாடங்களில் படிப்பதில் ஆர்வம் தூண்டும் வகையில், பாடம் சார்ந்த துணைக்கருவிகள், செய்முறை விளக்கங்கள் மற்றும் காணொளிகள் மூலமாக மாணவர்களுக்கு புரியும்படி பாடங்களை விளக்க வேண்டும்.

கற்றலில் பின்தங்கிய (Slow Learners) மாணவர்கள் மீது கூடுதல் கவனம் செலுத்தி அரையாண்டு தேர்வில் அனைத்து மாணவர்களும் முழுமையாக தேர்ச்சி அடைவதை ஒவ்வொரு பாட ஆசிரியர்களும் உறுதி செய்யும் வகையில் பணியாற்ற வேண்டும்.

மார்ச் 2026 -இல் நடைபெற உள்ள 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில்100% தேர்ச்சியினை அடையும் வகையில் அனைத்து ஆசிரியர்களும் பணியாற்ற வேண்டும். மேலும் உயர்கல்விக்கான நுழைவுத்தேர்வு மற்றும் போட்டித்தேர்வுகள் குறித்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார். இக்கூட்டத்தில் முதன்மைக் கல்வி அலுவலர் உஷா, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# திருப்பூர் தேசிய சட்ட உரிமை மக்கள் பாதுகாப்பு கவுன்சில் சார்பில் தேவர் ஜெயந்தி விழா

திருப்பூர், நவ.01-

திருப்பூர் மாவட்டம் திருமுருகன் பூண்டியில் பசும் பொன்.முத்துரா மலிங்க தேவர் ஜெயந்தி விழாவை முன்னிட்டு, தேசிய சட்ட உரிமை மக்கள் பாதுகாப்பு கவுன் சில் சார்பில் மேற்கு மண்டல இளைஞர் அணி செயலாளர் மணிகண்டன் தலைமையில், ஐயா பசும்பொன் முத்து ராமலிங்கதேவர் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி, பொதுமக்களுக்கு அன்ன தானம் வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.



# ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கான சிறப்பு தீவிர திருத்தம் பணிகள் தொடர்பான பயிற்சி முகாம்

## சமூக பாதுதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் செந்தில்வேல் தலைமையில் நடைபெற்றது

திண்டுக்கல், அக்.01-

திண்டுக்கல் மாவட்டம் 129 ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கான சிறப்பு தீவிர திருத்தம் பணிகள் தொடர்பான பயிற்சி முகாம் செம்பட்டியில் உள்ள அன்பு மஹாலில் நடைபெற்றது. முகாமிற்கு வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் செந்தில்வேல் தலைமை தாங்கினார். ஆத்தூர் வட்டாட்சியர் முத்துமுருகன் வரவேற்று பேசினார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் சரவணன் பயிற்சி முகாமை பார்வை யிட்டதோடு வாக்குச்சாவடி நிலை முகவர்களின் (பிஎல்ஏ) கட்சிநிர்வாகளின் சந்தேகங்களை கேட்டறிந்து அதை நிவர்த்தி செய்யும் விதம் குறித்து தெளிவாக எடுத்துரைத்தார். அதன்பின்னர் அனைத்து கட்சி முகவர்கள் மத்தியில் பேசிய மாவட்ட ஆட்சியர் சரவணன் திண்டுக்கல் மாவட்டத்திலேயே மிகப்பெரிய தொகுதியாக ஆத்தூர் சட்டமன்ற தொகுதி உள்ளது. சுமார் 2லட்சத்து 90ஆயிரம் வாக்காளர்கள் உள்ளனர். மத்திய அரசு தற்போது வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தத்தை கொண்டுவந்துள்ளது. நீங்கள் வீடு வீடாக சென்று ஒரு நபரைகூட விடாமல் 18வயது பூர்த்தி அடைந்தவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும் உங்களுக்கு நவம்பர் 4முதல் டிசம்பர் 4வரை ஒருமாத காலம் வீடு தோறும் ஆய்வு செய்ய நேரம் உள்ளது. இதுதவிர டிசம்பர் 9முதல் 2026 ஜனவரி 8 வரை உரிமை கோரல்கள் மற்றும் மறுப்புரைகள் பெறும் காலம் உள்ளது. டிசம்பர் 9 முதல் 2026 ஜனவரி 31 வரை விசாரணை மற்றும் சரிபார்ப்பு உள்ளது அதன்பின்னர் பிப்ரவரி 7ம் தேதி இறுதி கட்ட வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுகிறது. ஒரு குடும்பத்தில் உள்ள நபர் வெளியூர் சென்றிருந்தால் அவருக்கான விண்ணபத்தை பெற்றுக் கொண்டு அதில் அவர்களின் கையெழுத்தை வாங்கி முறையாக அதிகாரிகளிடம் ஒப்படைத்தால் அவர்களின் பெயர் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படும். கூட்டத்தில் தேர்தல் பிரிவு தனித்துணை வட்டாட்சியர் மூர்த்தி, திமுக ஒன்றியகழக செயலாளர்கள் சிவகுருசாமி, மணி, இன்பராஜ், ராமன், பிள்ளையார்நத்தம் முருகேசன், சீவல்சரகு ராஜேந்திரன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், மகளிர் அணியை சேர்ந்த பாப்பாத்தி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மனலூர் மணிகண்டன், பேரூர்கழக செயலாளர்கள் தங்கராஜ், சக்திவேல், கன்னிவாடி இளங்கோவன், பேரூராட்சிமன்ற தலைவர்கள் ரேகா அய்யப்பன், தனலெட்சுமி சண்முகம், மற்றும் வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம உதவியாளர்கள் அலுவலக பணியாளர்கள் பலர் கலந்துகொண்டனர். கூட்டத்தில் திமுக, அதிமுக, தே.மு.தி.க, அமமுக, நாம்தமிழர், சி.பி.எம். தவெ.க, தமிழக வாழ்வுரிமை கட்சி, காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளை சேர்ந்த வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கலந்துகொண்டனர். நிறைவாக தேர்தல் பிரிவு தனித்துணை வட்டாட்சியர் மூர்த்தி நன்றி கூறினார்.

# விவசாயத்தையும், குடிநீர் ஆதாரத்தையும் அழிக்கும் சாயப்பட்டறையை சேலம் நகரில் அமைப்பதா? - அன்புமணி

சென்னை, நவ.01-

சேலம் ஜாகிர் அம்மாபாளையம் ஜவுளி பூங்காவில் சாயப்பட்டறைகள் அமைக்கும் திட்டத்தை அரசு கைவிட வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சேலம் ஜாகிர் அம்மாபாளையம் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் ஜவுளி பூங்காவில் நீர், நிலம் மற்றும் சுற்றுச்சூழலைக் கெடுக்கும் வகையிலான சாயப்பட்டறைகள் அமைக்க அரசு அனுமதி அளித்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது. விவசாயத்தையும், குடிநீர் ஆதாரங்களையும் மேம்படுத்துவதற்காக எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்காத திமுக அரசு, அவற்றை அழிப்பதற்கு துணை போவது கண்டிக்கத்தக்கது.

சேலம் மாநகர எல்லையில் உள்ள ஜாகிர் பாளையத்தில் உருவாக்கப்பட்டுள்ள சிப்காட் வளாகத்தில், 119 ஏக்கர் பரப்பளவில் ரூ.800 கோடி முதலீட்டில் ஜவுளி பூங்கா அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதற்கான தொடக்கக்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. ஜவுளி பூங்காவின் ஓர் அங்கமாக பல சாயப்பட்டறைகள் அமைக்கப்படவுள்ளதாகவும், இதற்காக சேலம் யான் கலரிங் பார்க் பிரைவேட் லிமிடெட் உள்ளிட்ட பல நிறுவனங் களுக்கு சாயப்பட்டறை அமைக்க அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

தொழில் வளர்ச்சியை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அரசுத் தரப்பில் கூறப்பட்டாலும் கூட, மக்கள் நலன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு பார்க்கும் போது சாயப்பட்டறைகளை அமைப்பது மிகக்கொடிய பேரழிவை ஏற்படுத்தும் திட்டமாகும்.

சாயப்பட்டறைகளால் இரு வகையாக பாதிப்புகள் ஏற்படுகின்றன. முதலாவது சாயப்பட்டறைகளின் தேவைக்காக தினமும் கோடிக்கணக்கான லிட்டர் நிலத்தடி நீர் ராட்சத எந்திரங்களைக் கொண்டு உறிஞ்சி எடுக்கப்படும். இதனால் நிலத்தடி நீர்மட்டம் மிகக் கடுமையாக பாதிக்கப்படும்.

அடுத்ததாக சாயப்பட்டறைகளில் இருந்து வெளியேற்றப்படும் வேதிப்பொருள்களும், நச்சுப் பொருள்களும் கலந்த கழிவுநீர் நிலம், நீர், வாயு உள்ளிட்ட இயற்கை வளங்களுக்கும், சுற்றுச்சூழலுக்கும் சரி செய்ய முடியாத பாதிப்பை ஏற்படுத்தி விடும். அதனால் தான் சாயப்பட்டறைகளை சுற்றுச்சூழலின் முதல் எதிரியாக பாமக கருதுகிறது.

தமிழ்நாட்டில் சாயப்பட்டறைகள் செயல்படும் எந்த பகுதியிலும் அவற்றின் கழிவு நீர் முறையாக சுத்திகரிக்கப்படுவதில்லை. கடலோரப்பகுதிகளிலும், ஆற்றங்கரைகளிலும் அமைந்திருக்கும் சாயப்பட்டறைகளின் கழிவு நீர் அரைகுறையாக சுத்திகரிக்கப்பட்டு ஆறுகளிலும், கடல்களிலும் கலக்கவிடப்படுகின்றன. காவிரி, தென்பெண்ணை, பவானி, அமராவதி, நொய்யல் உள்ளிட்ட பல ஆறுகள் சாயப்பட்டறை கழிவுகளால் தான் கொஞ்சம், கொஞ்சமாக கொலை செய்யப்பட்டு வருகின்றன.



அதேபோல், கோவை, ஈரோடு, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள சாயப்பட்டறைகளின் கழிவு நீரை சாலை வழியாக கொண்டு வந்து சுத்திகரிப்பதற்கு வசதியாக, கடலூர் மாவட்டம் பெரியபட்டு பகுதியில் சாயப்பட்டறைகள், துணி ஆலைகள் ஆகியவற்றுடன் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க பல ஆண்டுகளாக முயற்சி மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

உண்மை என்னவென்றால், அங்குள்ள சாயப்பட்டறைகளின் கழிவுகளையும், கோவை மண்டலத்திலிருந்து கொண்டு வரப்படும் கழிவுகளையும் முறையாக சுத்திகரிக்காமல் கடலில் கலக்கச் செய்வது தான் அரசின் திட்டமாகும். இந்த நாசகார திட்டத்திற்கு எதிராக பாட்டாளி மக்கள் கட்சி தொடர் போராட்டங்களை நடத்தி இன்று வரையிலும் அங்கு பேரழிவுத் திட்டம் வராமல் தடுத்து வருகிறது.

இரண்டாவதாக சாயப்பட்டறைகளின் கழிவு நீர் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு, அவற்றின் வாயிலாக நிலத்தில் செலுத்தப்படுகிறது. இவை நிலத்தடி நீரில் கலந்து மோசமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. ஈரோடு மாவட்டம் பெருந்துறை சிப்காட் வளாகத்தில் சாயப்பட்டறைகளின் கழிவுகள் நிலத்தடி நீருடன் கலக்கவிடப்பட்டதால், அங்குள்ள மக்களுக்கு புற்றுநோய் உள்ளிட்ட நோய்கள் ஏற்பட்டிருப்பது ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. சேலம் ஜாகிர் அம்மாபாளையம் ஜவுளி பூங்காவில் சாயப்பட்டறைகள் அமைக்கப்பட்டாலும் அதேபோன்ற நோய் பாதிப்புகள் ஏற்படுவது உறுதி.

சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பல பகுதிகள், புளியம்பட்டி, குள்ளக்கவுண்டனூர், பல்பாக்கி, வெள்ளாளப் பட்டி, தேக்கம்பட்டி, மூங்கில்பாடி, செங்காடு உள்ளிட்ட பல பகுதிகளுக்கு வெள்ளக்கல்பட்டி, மாமாங்கம், கருப்பூர் போன்ற பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர் திட்டங்களின் வாயிலாகத் தான் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

அதுமட்டுமின்றி, ஜாகிர் அம்மாபாளையம் பகுதியில் 4 ஆயிரம் ஏக்கருக்கும் கூடுதலான பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அதற்கு நிலத்தடி நீர் மட்டும் தான் பாசன ஆதாரமாக உள்ளது. இத்தகைய நிலையில் ஜாகிர் அம்மாபாளையம் ஜவுளி பூங்காவில் சாயப்பட்டறைகள் அமைக்கப் பட்டால் குடிநீர் ஆதாரங்களும், வேளாண்மையும் முற்றிலுமாக அழிந்து விடும்.

சில பத்தாண்டுகளுக்கு முன்பு வரை நிலத்தடி நீர் இளநீரைப் போன்ற சுவையுடன் இருந்தது. ஆறுகளிலும் தூய்மையான நீர் ஓடியது. தொழில் வளர்ச்சி என்ற பெயரில் அவை அனைத்தும் சீரழிக்கப்பட்டன. அந்த சீரழிவுகளை சரி செய்ய வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தி வரும் நிலையில், அவற்றை மேலும், மேலும் சீரழிக்கும் சதியில் தமிழக அரசு ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது.

எனவே, ஜாகிர் அம்மாபாளையம் ஜவுளி பூங்காவில் சாயப்பட்டறைகள் அமைக்கும் திட்டத்தை அரசு கைவிட வேண்டும். இல்லாவிட்டால், பா.ம.க. சார்பில் மக்களைத் திரட்டி நானே தலைமையேற்று போராட்டம் நடத்துவேன்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் 33 ஆண்டுக்கு பிறகு அணு ஆயுத சோதனை: அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு

வாஷிங்டன், நவ.01-

அமெரிக்காவில் மீண்டும் அணு ஆயுத சோதனை நடத்தப்படும் என்று அந்த நாட்டு அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.



கடந்த 1945ம் ஆண்டு ஜூலை 16ம் தேதி அமெரிக்காவில் முதல் அணு ஆயுத சோதனை நடத்தப்பட்டது. அந்த நாடு இதுவரை 1,054 அணு ஆயுத சோதனைகளை நடத்தி உள்ளது. கடைசியாக கடந்த 1992ம் ஆண்டு செப்டம்பர் 23ம் தேதி அமெரிக்காவின் நெவாடா அணு சக்தி சோதனை நடத்தியதில் பூமிக்கடியில் 2,300 அடி ஆழத்தில் சோதனை நடத்தப்பட்டது.

சமீபத்திய புள்ளிவிவரத்தின்படி அமெரிக்காவிடம் 5,044 அணு ஆயுதங்கள் உள்ளன. ரஷ்யாவிடம் இதே அளவுக்கு அணு ஆயுதங்கள் உள்ளன. சீனாவிடம் 550, பிரான்ஸிடம் 290, பிரிட்டனிடம் 225, இந்தியாவிடம் 180 அணு ஆயுதங்கள் உள்ளன.

ரஷ்யாவின் ஏவுகணை: இந்த சூழலில் ரஷ்யா அண்மையில் அணு சக்தியில் செயல்படும் ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்தது. இது உலகின் முதல் அணு சக்தி இயங்குதள ஏவுகணை ஆகும். இந்த ஏவுகணை 14,000 கி.மீ. தொலைவு வரை சீறிப் பாயும். அணு சக்தியில் தொடர்ந்து 15 மணி நேரம் பறக்கும் திறன் கொண்டதாகும்.

வரும் 2030ம் ஆண்டுக்குள் அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை 1,000 ஆக அதிகரிக்க சீன ராணுவம் திட்டமிட்டு உள்ளது. அந்த நாட்டில் கடந்த 1990ம் ஆண்டில் அணு ஆயுத சோதனை நிறுத்தப்பட்டது. ஆனால் சீன ராணுவம் ரகசியமாக அணு ஆயுத சோதனை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த சூழலில் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் சமூக வலைதள பதிவில் நேற்று கூறியிருப்பதாவது: இதர நாடுகளைவிட அமெரிக்காவிடம் அதிக அணு ஆயுதங்கள் உள்ளன. எனது முதல் ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவின் அணு ஆயுதங்கள் புதுப்பிக்கப்பட்டன. தற்போதைய சூழலை கருத்தில் கொண்டு 33 ஆண்டுகளுக்கு பிறகு அமெரிக்காவில் மீண்டும் அணு ஆயுத சோதனை நடத்த அறிவுறுத்தி உள்ளேன். இதன்படி அமெரிக்காவில் விரைவில் அணு ஆயுத சோதனை தொடங்கும்.

அதிக அணு ஆயுதங்கள் வைத்திருக்கும் நாடுகள் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. 2வது இடத்தில் ரஷ்யா, 3வது இடத்தில் சீனா உள்ளன. அணு ஆயுதங்களால் பேரழிவு ஏற்படும் என்பதை நன்கறிவேன். அணு ஆயுத சோதனைகளை நடத்த நான் விரும்பவில்லை. ஆனால் இதர நாடுகள் அணு ஆயுத சோதனைகளை நடத்தும் சூழலில் அமெரிக்காவிலும் அணு ஆயுத சோதனை நடத்த போர் துறையை அறிவுறுத்தி உள்ளேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



# ஏழுமலையானுக்கு 9 டன் மலர்களால் யாகம்

திருமலை, நவ.01-

வருடாந்திர புஷ்ப யாக நிகழ்ச்சி நேற்று திருமலையில் வெகு சிறப்பாக நடந்தது.

இதனையொட்டி நேற்று காலை உற்சவ மூர்த்திகளான ஸ்ரீதேவி, பூதேவி, சமேதமாய் மலையப்பருக்கு சிறப்பு திருமஞ்சன நிகழ்ச்சிகள் நடந்தன. முன்னதாக 9 டன் மலர்க் கூடைகளை தேவஸ்தான ஊழியர்கள், அதிகாரிகள் ஊர்வலமாக கொண்டு வந்து கோயிலில் ஒப்படைத்தனர்.

இது தொடர்பாக திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாக அதிகாரி அனில்குமார் சிங்கால் திருமலையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஆண்டுதோறும் பிரம்மோற்சவ விழா முடிந்த பின்னர், உற்சவ மூர்த்திகளுக்கு புஷ்ப யாகம் நடத்துவது ஐதீகம். கார்த்திகை மாதம் பெருமாளின் திருவோணம் நட்சத்திரத்தில் இந்த புஷ்ப யாகம் நடத்தப்படும். இதை கடந்த 15ம் நூற்றாண்டு வரை தொடர்ந்து அரசர்கள் நடத்தி வந்துள்ளனர். அதன்பின்னர், எந்த காரணத்தினாலோ புஷ்பயாகம் கைவிடப்பட்டுள்ளது. கடந்த 1980ம் ஆண்டு முதல் திருமலை திருப்பதி தேவஸ்தானம் இந்த புஷ்ப யாகத்தை மீண்டும் நடத்தி வருகிறது.

இந்த புஷ்ப யாகத்தில் 16 வகை பூக்களும், 6 வகை துளசி, தவனம் போன்ற இலைகளும் உபயோகப்படுத்தப்பட்டன. இதில் 5 டன் மலர்கள் தமிழகத்தில் இருந்தும், தலா 2 டன் மலர்கள் கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் நன்கொடையாக வழங்கினர். இவ்வாறு அனில்குமார் சிங்கால் கூறினார்.





# திருப்பூர் மாவட்ட அகில இந்திய பார்வர்ட் பிளாக் சார்பாக தேவர் ஜெயந்தி விழா

திருப்பூர், நவ.01-

அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் முன்னாள் தேசிய தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தேசியமும் தெய்வீகமும் எனது இரு கண்கள் என வாழ்ந்து தனது சொத்துக்களை எல்லாம் ஏழை எளிய மக்களுக்காக எழுதி கொடுத்த உத்தம தேசிய தலைவர் பசும்பொன் உ. முத்துராமலிங்க தேவர் அவர்களின் 118 வது ஜெயந்தி விழா மற்றும் 63 வது குருபூஜை விழாவினை முன்னிட்டு மாநகர் மாவட்ட செயலாளர் மகேஷ் குமார் தேவர் தலைமையிலும் மாநகர் மாவட்ட தலைவர் மகாலிங்கம் முன்னிலையிலும் நடைபெற்றது இந்த விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக மாநில பொதுச் செயலாளர் எஸ் கர்ணன் தேவர் கலந்து கொண்டு அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த அவரது திருவுருவப்படுத்தி இருக்கும் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி அன்னதானத்தை வழங்கி சிறப்பித்தார் மேலும் பல்வேறு இடங்களில் புலிக்கொடி ஏற்றப்பட்டது இந்த நிகழ்வில் மாநகர செயலாளர் இளைஞர் அணி மாவட்ட செயலாளர் பிரபாகரன் மாவட்ட இளைஞரணி துணைச் செயலாளர் யோகேஸ்வரன் பகுதி செயலாளர் சங்கராபுரம் முருகன் உள்ளிட்ட நிர்வாகிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர் திருப்பூர் மாவட்டம் முழுவதிலும் 25க்கும் மேற்பட்ட இடங்களில் அன்னதானம் வழங்கப்பட்டது...

# என்னுடைய 'மூவ்' தனியாகத்தான் இருக்கும், ஆனால் 'சக்சஸில்' முடியும்: சசிகலா

மதுரை, அக்.31-

என்னுடைய 'மூவ்' தனியாகத்தான் இருக்கும், ஆனால் 'சக்சஸில்' தான் முடியும் என அதிமுக முன்னாள் பொதுச்செயலாளர் சசிகலா மதுரையில் இன்று தெரிவித்தார்.

மதுரையில் இன்று அதிமுக முன்னாள் பொதுச்செயலாளர் சசிகலா செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: தமிழகத்தில் 10 மாதங்களில் மாவட்டந்தோறும் கொலைகளின் எண்ணிக்கை அதிகரித்து சட்டம் ஒழுங்கு கெட்டுள்ளது. பள்ளி அளவில் போதைப்பொருள் சர்வ சாதாரணமாக கிடைக்கிறது. திமுக அரசின் கண் அசைவு இல்லாமல் போதைப்பொருள் இந்தளவுக்கு புழக்கம் வருவதற்கு வேலை இல்லை. தமிழகத்திலிருந்து திமுக அரசாங்கம் போனால்தான் மக்களுக்கு விடிவுகாலம் வரும்.

தேவர் ஜெயந்தியில் அனைவரையும் சந்திப்பது வழக்கம். அதிமுகவை ஒருங்கிணைப்பது குறித்து தொடர்ந்து சொல்லிக்கொண்டிக்கிறேன். 'சர்ப்பிரைஸ்' ஆக எல்லாமே நடக்கும். அதிமுகவை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவேன் என்று சொல்கிறேன். அதைப் பொறுத்திருந்து பாருங்கள். தேர்தல் தான் முடிவு. நான் என்ன செய்கிறேன் என பொறுத்திருந்து பாருங்கள்.

தமிழக அரசின் நகராட்சி துறை பணியாளர்கள் நியமனத்தில் அமலாக்கத்துறை விசாரணை போய்க்கொண்டிருக்கிறது. டிஜிபிக்கு கடிதம் கொடுத்தாக சொல்கின்றனர். உண்மையிருந்தால் வெளியில் வந்தாகும். நீங்கள் கவலைப்படாதீர்கள். தொண்டர்களுக்காகத்தான் நான் எல்லாமே செய்துகொண்டிருக்கிறேன். வெற்றிகரமாக முடிப்பேன்.

தமிழகத்தில் மொத்தம் 22 பல்கலைக்கழகத்தில் 14 பல்கலைக்கழங்களில் துணைவேந்தர்கள் இல்லை. அதுபற்றி முதல்வரிடம் தமிழக ஊடகங்கள் கேள்வி கேட்காமல் வாயடைத்து மவுனமாக இருப்பது ஏன் எனத் தெரியவில்லை. ஜெயலலிதா கொண்டுவந்த அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கும் துணைவேந்தர் இல்லை.



நான் எல்லோருக்கும் பொதுவானவர் என்பதால் தொண்டர்கள் என்னை வந்து பார்க்கின்றனர், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியுமா. பள்ளிக்கரணை சதுப்பு நிலம் 698 ஹெக்டேர் பரப்புடையது, அதை சுற்றி 1 கிமீ தொலைவுக்கு கட்டிடங்கள் இருக்கக்கூடாது என தீர்ப்பாயம் சொல்லியுள்ளது. சென்னைக்கு காப்புக்காடுகள் அவசியம். அதில் அனுமதி கொடுத்தது தவறு. அதனை உணர்ந்து ரத்து செய்தால் நல்லது. சமூக பொறுப்பு ஆட்சியாளர்களுக்கு இருக்க வேண்டும்.

நான் 1987 டிச.25ம் தேதி எம்ஜிஆர் மறைவில் இருந்து கட்சியை பார்த்து கொண்டிருக்கிறேன். இதபோல் பேசியவர்களையும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதிமுகவுக்கு இரண்டாவது முறை பிரச்சினை வந்துள்ளது. இதுவும் சுமூகமாக தீர்க்கப்படும். தமிழக ஊடகங்கள் ஒருதலை பட்சமாக இருப்பதைப்போன்று ஒரு உணர்வு இருக்கிறது. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படி தேர்தல் ஆணையத்துக்கு வாக்காளர் சிறப்பு திருத்தம் செய்யும் உரிமை இருக்கிறது. 2006ல் ஜெயலலிதா ஆட்சியில் ஆறரை லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர்.

அப்போது அவர் தேர்தல் ஆணைய நடைமுறைய ஏற்றுக்கொண்டார். தற்போது திமுக போல் பூதாகரமாக்கவில்லை. 2006 லிருந்து 2011 வரை திமுக ஆட்சியில் இதே வாக்காளர் சிறப்பு திருத்தப்படி 49 லட்சத்து 82 ஆயிரம் பேர் நீக்கினர். பொய் வாக்காளர்களை சேர்ப்பது திமுகவின் பழக்கம். அதிமுக போன்ற எதிர்க்கட்சிகள்தான் விழிப்போடு இருக்க வேண்டும். அரசியலில் எடுத்தோம், கவிழ்த்தோம் என்று செய்யும் பழக்கம் என்னிடம் இல்லை. 1987 லிருந்து என்னைப்பற்றி அறிந்த சீனியர்களுக்கு நான் எப்படி 'டீல்' செய்வேன் எனத் தெரியும். தற்போதுள்ளவர்களுக்கு தெரியாது.

எனவே பொறுத்திருந்து பாருங்கள். அதை என்னிடமிருந்து கற்றுக்கொள்ளலாம். எம்ஜிஆர் மறைவுக்குப்பின் ஜெயலலிதாவுக்கு ஏராளமான பிரச்சினைகள். அப்போதைய அமைச்சர்கள் எதிர்த்தனர், கட்சி இரண்டாகிறது, 2 சின்னத்தில் போட்டி யிடுகிறோம், ஜெயலலிதா எதிர்க்கட்சி தலைவரானார்.

அதன்பின்பு கட்சியை ஒன்றிணைத்து வெற்றி பெற்று ஆட்சி அமைத்தோம். இதை எல்லாம் செய்தது நான்தான். அதன்பின்னர் அதிமுக ஆட்சி அமைத்தபோது ஜெயலலிதாவை எதிர்த்தவர்கள், திட்டியவர்களை கூட சபாநாயகராக்கினோம், அமைச்சராக்கினோம். எனவே என்னுடைய 'மூவ்' தனியாகத்தான் இருக்கும், ஆனால் 'சக்சஸில்'தான் முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

# ரூ.50,000க்கு மேல் செலவு: தீபாவளிக்கு கிரெடிட் கார்டு பயன்பாடு அதிகரிப்பு

புதுடெல்லி, நவ.01-

இந்த தீபாவளி பண்டிகையின் போது பிளிப்கார்ட், அமேசான் போன்ற ஆன்லைன் வணிக நிறுவனங்கள் கிரெடிட் கார்டு, டெபிட் கார்டுகளுக்கு பல்வேறு சலுகைகளை அறிவித்திருந்தன. 91 சதவீதம் பேர் இந்த கார்டுக்கான கேஷ் பேக் ஆபர் களை மனதில் வைத்து இந்த தீபாவளிக்கு பொருட்களை வாங்க வேண்டும் என திட்ட மிட்டிருந்தனர்.

இதேபோன்று 48 சதவீதம் பேர் ஆன்லைன் மற்றும் ஆப் லைன் ஆகிய இரண்டின் வழி யாகவும் தீபாவளிக்கு தேவை யான பொருட்களை தேர்வு செய்தனர்.

இது தொடர்பாக பைசாபஜார் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளதாவது: கிரெட்டிட் கார்டு மூலம் கடன் வாங்கி இந்த தீபாவளியை பலர் மகிழ்ச்சியாக கொண்டாடி உள்ளனர். குறிப்பாக, 42 சதவீதம் பேர் இந்த ஆண்டு தீபாவளி பண்டிகையின்போது தங்களது ஷாப்பிங்கிற்காக ரூ.50,000க்கும் மேல் செலவிட்டுள்ளது ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது நுகர்வோரிடையே அதிக பொருட்களை வாங்க வேண்டும் என்ற ஆர்வத்தை அடிக்கோடிட்டு காட்டுவதாக உள்ளது. 22% பேர் ரூ. 50,000 முதல் ரூ. 1 லட்சம் வரை செலவிட் டுள்ளனர், அதே நேரத்தில் 20% பேர் இந்த தீபாவளியின் போது ரூ.1 லட்சத்திற்கு மேல் தங்கள் கிரெடிட் கார்டுகளில் செலவிட்டுள்ளனர்.

2,300 பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வில் அதிகபட்சமாக ஹோம் அப்ளையன்சஸை 25% பேரும், அதற்கு அடுத்த படியாக மொபைல் கேட்ஜெட்டு களை 23% பேரும், ஆடைகளை 22% பேரும் வாங்கியுள்ளனர். அதிக சலுகைகள் வழங்கப்படுவதன் காரணமாக கிரெடிட் கார்டுகளைப் பயன்படுத்துவது அதிகரித்து வருவது கணக் கெடுப்பு மூலம் தெரியவந் துள்ளது. இவ்வாறு பைசாபஜார் தெரிவித்துள்ளது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000